**செய்தி வெளியீடு எண்.303** **நாள். 23.4.2008**

# 1312 சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்

## முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி நிலையங்களில் பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்குத் தகுதி அடிப்படையிலான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் 2007–2008ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்குப் படிப்புக் கட்டணம் முழுமையாகவும், பராமரிப்புக் கட்டணம் மாதமொன்றுக்கு விடுதி மாணவர்களாக இருப்பின் தலா 1000 ரூபாய் வீதமும், விடுதியில் தங்காமல் பயிலும் மாணவர்களாக இருப்பின் 500 ரூபாய் வீதமும் பத்து மாதங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். இதர கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்குப் படிப்புக் கட்டணம் தலா 20 ஆயிரம் ரூபாய் அல்லது அவர்கள் செலுத்திய கல்விக் கட்டணம் இதில் எது குறைவோ, அத்தொகையுடன் பராமரிப்புக் கட்டணமும் வழங்கப்படும். இச்சலுகை பெற பெற்றோரின் ஆண்டு வருமானம் 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவோர் எண்ணிக்கையில் 30 சதவிகிதம் அளவுக்கு பெண்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்த 913 மாணவ, மாணவியருக்கும், இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த 399 மாணவ, மாணவியருக்கும் ஆக மொத்தம் 1312 சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு 3 கோடியே 50 இலட்ச ரூபாய் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. சென்னை அரசு பல்மருத்துவக் கல்லூரி, சென்னை கிரசன்ட் பொறியியல் கல்லூரி, டி.எம்.ஐ. பொறியியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த சிறுபான்மைச் சமுதாய மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகைகளுக்கான காசோலைகள் வழங்கி முதலமைச்சர் கலைஞர் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்படும் மாணவ, மாணவியர் விடுதிகளில் சில்லரைச் செலவின அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுப் பல ஆண்டுகளாகப் பணிவரன்முறை செய்யப்படாமல் விடுபட்டுப்போன

15 ஊழியர்களின் பணியினை வரன்முறை செய்து அதற்குரிய ஆணைகளையும் முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.

இந்த 15 பணியாளர்களில் இருவர் பணியிலிருக்கும்போதும், மூவர் பணி ஒய்வுபெற்ற பின்னரும் இறந்துள்ளனர். முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இந்த ஆணையின் காரணமாக, ஏற்கனவே இறந்து போனவர்களின் வாரிசுகளுக்கும் பணிக்காலத்திற்கான நிலுவைத்தொகை கிடைப்பதுடன், குடும்ப ஓய்வூதியப் பயன்களும் கிடைக்கும். பணியிலிலுள்ள 10 பேர்களுக்கும் ஊதிய ஏற்ற முறையில் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவைத்தொகை வழங்கப்படும்.

இந்நிகழ்வின்போது, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் அருள்தந்தை சேவியர் அருள்ராஜ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு.நா.வாசுதேவன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் திரு ஆர்.எஸ். கண்ணா, இ.ஆ.ப., மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் திரு ப. அண்ணாமலை, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9

**செய்தி வெளியீடு– 23.4.2008**

# பிற்படுத்தப்பட்டோர்–மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதிப் பணியாளர்கள் 15 பேருக்கு பணிவரன்முறை ஆணைகள்

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்படும் மாணவ, மாணவியர் விடுதிகளில் சில்லரைச் செலவின அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுப் பல ஆண்டுகளாகப் பணிவரன்முறை செய்யப்படாமல் விடுபட்டுப்போன 15 ஊழியர்களின் பணியினை வரன்முறை செய்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த 15 பணியாளர்களில் இருவர் பணியிலிருக்கும்போதும், மூவர் பணி ஓய்வுபெற்ற பின்னரும் இறந்துள்ளனர். முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இந்த ஆணையின் காரணமாக, ஏற்கனவே இறந்து போனவர்களின் வாரிசுகளுக்கும் பணிக்காலத்திற்கான நிலுவைத்தொகை கிடைப்பதுடன், குடும்ப ஓய்வூதியப் பயனும் கிடைக்கும். பணியிலிலுள்ள 10 பேர்களுக்கும் ஊதிய ஏற்ற முறையில் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவைத்தொகை வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு ஓய்வூதியப் பயனும் கிடைக்கும்.

இந்தப் பணியாளர்களுக்கான பணிவரன்முறை ஆணைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (23.4.2008) உரியவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், செயலாளர் திரு.நா.வாசுதேவன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *